**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | |
|---|---|
| **Calendar** | : **CC .21/2014** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **PW.5 பூங்கொடி** |
| **Father's Name** | : கருப்பையா |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.09.2021

மு.வி:

நான் தற்போது நல்லுத்தேவன்பட்டியில் குடியிருந்துவருகிறேன். எனக்கு சாட்சிகள் 1முதல்3, 5முதல் 9 வரை உள்ளவர்களை எனக்கு தெரியும். கடந்த 2013ம் வருடம் சம்பவத்தினத்தன்று பகல் 1.00 மணிக்குமேல் நான்எனது இருசக்கரவாகனத்தில் நான் ஓட்ட எனக்கு பின்னால் தெய்வேந்திரன் அமர்ந்து உசிலம்பட்டிக்கு சென்றுகொண்டுருந்தோம். பண்ணைப்பட்டி விளக்குஅருகே நான்போகும்போது விபத்து நடந்துமுடிந்தது. பல்சர் இருசக்கரவாகணம் விபத்துக்குள்ளாகியிருந்தது. இருசக்கரவாகனத்தின் மீது Eicher வாகனம் மோதி விபத்துக்குள்ளாகிஇருந்தது. ஓட்டுநர் இறங்கி சென்றுவிட்டார். பல்சர் இருசக்கரவாகனத்தில் செல்வக்குமார் மற்றும் பிரபாகரன் ஆகியோர் சென்று விபத்துக்குள்ளாகியிருந்தனர். பிரபாகரன் வண்டியைஓட்டி சென்றுந்தார். பிரபாகரனுக்கு காலிலும் முகத்திலும் அடிப்பட்டிருந்தது. கீழே விழுந்துகிடந்தார். செல்வகுமாருக்கு தலை மற்றும் காலிலும் அடிப்பட்டு கீழே விழுந்துகிடந்தார். பின்பு தகவல் தெரிந்து அசா1 மற்றும் அசா3 அங்கு வந்தனர். பின்பு ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி அதுவரதாமதம் ஆனதால் இரண்டு

இருசக்கரவாகனங்களில் காயம்பட்ட நபர்களை உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்றோம். செல்வகுமார் நிலைமை மோசமாக இருந்ததால் மேல்சிகிச்சைக்காக மதுரைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்துவிட்டார். மேலும் அசா2 பிரபாகரன் 1மாதகாலம் காயத்திற்கு சிகிச்சை எடுத்துக்கொண்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

சாட்சிபட்டியலிலுள்ள 1முதல் 3 மற்றும் 5முதல் 9 வரையிலானவர்கள் உங்கள் ஊர்க்காரர் என்று சொன்னால் சரிதான். பண்ணைப்பட்டி விளக்கு அருகே தான்விபத்துநடந்தது என்று சொன்னால் சரிதான். பண்ணைப்பட்டிவிளக்கு அருகே தென்வடல் ரோட்டின் மேற்கு பக்கமாக பண்ணைப்பட்டிக்கு செல்லும் சாலை உள்ளது என்று சொன்னால் சரிதான். காயம்பட்ட நபர்கள் தார்ரோட்டில் கிடந்தார்களா அல்லது மண்ரோட்டில்கிடந்தார்களா என்றால் ஒருவர் தார் ரோட்டில் மற்றும் இன்னொருவர் மண்ரோட்டில் கிடந்தார். விபத்துகுள்ளான இருசக்கர வாகனம் தார்ரோட்டில் கிடந்ததா அல்லது மண்ரோட்டில் கிடந்ததா என்றால் தார் ரோட்டில் கிடந்தது. நீங்கள் சம்பவயிடத்திற்கு செல்வதற்கு முன்பு எத்தனை பேர் கூடியிருந்தார்கள் என்றால் சுமார் 50 நபர்கள் இருந்தார்கள். நீங்கள் அங்கு சென்று பார்த்தபின்புதான் காயம்பட்ட நபர்கள் உங்கள் ஊர்காரர்கள் எனத் தெரிந்துகொண்டீர்கள் என்றுசொன்னால் சரிதான். அதன்பின்புதான் அசா1மற்றும் அசா3 அங்கு வந்தார்கள் என்று சொன்னால் சரிதான்.

ம.வி.இல்லை

/Sd./Poongodi

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd.. R.M.Marimuthu,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.